வட மாகாண சபை தேர்தல் 2013

# சோ.ச.க. பிரசுரம்

சோசலிச சமத்துவக் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தின் பாகமாக உலக சோசலிச வலைத் தளத்தில் வெளியிடப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு விலை 10/=

## சோசலிச சமத்துவக் கட்சியின் வட மாகாணசபை தேர்தலுக்கான விஞ்ஞாபனம்

**சோசலிச சமத்துவக் கட்சி**
**21 ஆகஸ்ட் 2013**

சோசலிச சமத்துவக் கட்சி (சோ.ச.க.), செப்டெம்பர் 21 நடக்கவுள்ள வட மாகாணசபை தேர்தலில், யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசியல் குழு உறுப்பினர் திருஞானசம்பந்தர் தலைமையில் 19 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. எமது வேட்பாளர்களில் தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம்களுமாக தீவின் மூன்று சமூகங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள், மீனவர்கள், குடும்ப பெண்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களும் அடங்குவர்.

இந்து-பசுபிக் பிராந்தியத்தில் வளர்ச்சியடைந்து வரும் யுத்த ஆபத்துக்கு எதிராகவும், அரசாங்கத்தின் கொடூரமான சிக்கன திட்டங்களுக்கும் மற்றும் அதை திணிக்க இராணுவ பொலிஸ் வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கு எதிராகவும், ஒரு சோசலிச மற்றும் சர்வதேசிய வேலைத்திட்டத்துக்காகப் போராடும் ஒரே கட்சி சோ.ச.க. மட்டுமே ஆகும். நாம், வடக்கில் தற்போது தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பையும் அரசியல் ஸ்தாபனத்தின் சகல கட்சிகளதும் பிரிவினையான இனவாத அரசியலையும் எதிர்க்கின்றோம்.

1930களின் பின்னர் ஏற்பட்டுள்ள முதலாளித்துவத்தின் மோசமான பூகோள நெருக்கடியின் தாக்கத்தில் இருந்து இலங்கை விலக்கப்பட்ட ஒன்றல்ல. ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷவின் அரசாங்கமானது தொழில், அத்தியாவசிய சேவைகள் மற்றும் விலை மானியங்களை வெட்டக் கோரும் சர்வதேச நாணய நிதியத்தின் வேண்டுகோள்களை ஏற்கனவே திணித்துள்ளதோடு வாழ்க்கைத் தரத்தை மேலும் சீரழிக்கவுள்ளது. தமக்கு கிடைக்கும் தண்ணீர் மாசுபடுத்தப்பட்டதற்கு எதிராக வெலிவேரியவில் அண்மையில் ஆர்ப்பாட்டம் செய்த மூன்று கிராமத்தவர்களை இராணுவம் கொன்றமை, இந்த சிக்கன திட்டங்கள் அமைதியாக திணிக்கப்படப் போவதில்லை என்பதற்கான எச்சரிக்கையாகும்.

இந்த மாகாண சபை தேர்தலே, இலங்கையையும் உள்ளிழுக்கும் பிராந்தியப் பகைமை நீர்ச்சுழியின் விளைவாகும். பிராந்தியம் முழுவதிலும் உள்ள தமது சமதரப்பினர்களைப் போலவே, இராஜபக்ஷவும், தனது அரசாங்கம் பொருளாதார ரீதியில் சீனாவில் தங்கியிருப்பதற்கும், பெய்ஜிங்கிற்கு எதிரான அமெரிக்காவின் "ஆசியாவுக்குத் மீண்டும் திரும்புதல்" என்ற ஆக்கிரமிப்புத் திட்டத்துடன் அணிசேர வேண்டும் என்ற வாஷிங்டனின் கோரிக்கைக்கும் இடையில் முன்னெச்சரிக்கையான சமநிலை பேணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் கடந்த பின்னர் முதல் தடவையாக இராஜபக்ஷ தயக்கத்துடன் இந்த தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளது, அமெரிக்கா மற்றும் இந்தியாவின் அழுத்தத்தின் கீழேயே ஆகும். அவர், தீவின் தமிழ் தட்டினருக்கு எந்தவொரு சலுகையும் வழங்குவதை கசப்புடன் எதிர்க்கும் சிங்கள அதி தீவிரவாதிகளை அமைதிப்படுத்துவதற்கும் மற்றும் நாட்டின் நீண்ட கால உள்நாட்டு யுத்தத்துக்கு ஒரு "அரசியல் தீர்வை" காணுவதற்கான முயற்சியின் ஒரு பாகமாக, தமிழர்கள் செறிந்து வாழும் மாகாணத்தில்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## சிரியா மீது கை வைக்காதே!

**பரமு திருஞானசம்பந்தர்**
**(சோசகவின் யாழ்ப்பாண மாவட்ட தலைமை வேட்பாளர்)**
**4 செப்டெம்பர் 2013**

இலங்கையில் சோசலிச சமத்துவக் கட்சி (சோசக), சிரியாவுக்கு எதிராக அமெரிக்காவும் அதன் பங்காளிகளும் மேற்கொள்ளும் யுத்த திட்டங்களை கண்டனம் செய்கின்றது. இந்த சிறிய, ஒடுக்கப்பட்ட மற்றும் வளர்ச்சியடைந்து வரும் நாட்டின் மீதான திட்டமிடப்பட்ட அமெரிக்க இராணுவத் தாக்குதலை எதிர்க்குமாறு இலங்கை மற்றும் இந்தியா உட்பட தெற்காசியாவிலும் மற்றும் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் சோசலிச சமத்துவக் கட்சி அழைப்பு விடுக்கின்றது.

சர்வதேச சட்டத்தை மீறி, சிரியா மீது படையெடுக்க அச்சுறுத்துவதன் மூலம், அமெரிக்கா ஒரு சர்வதேச காடையர் போல் செயற்படுகின்றது. போருக்கான உத்தியோகபூர்வ காரணங்களாக முன்வைக்கப்படும் ஒரு தொகை பொய்கள், ஈராக் மீது 2003ல் போர் தொடுப்பதற்காக பயன்படுத்தப்பட்ட "பேரழிவு ஆயுதங்கள்" பற்றிய போலிக் காரணத்தை எதிரொலிக்கின்றன.

சிரியா மீதான போர், ஈரான் மீதான படையெடுப்புக்கும் மற்றும் ஒட்டு மொத்த உலக மக்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்குமளவு ரஷ்யா மற்றும் சீனாவும் சம்பந்தப்பட்ட ஒரு பரந்த போருக்கும் ஆரம்பமாக இருக்கும். அமெரிக்காவின் குறிக்கோள், உலகின் எரிசக்தி வழங்கல்கள் மீதும் யூரோஏசியன் பெருநிலப்பரப்பின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதை இலக்காக் கொண்டது. அதன் ஆதிக்கத்துக்கு எந்தவொரு பிராந்திய அல்லது சர்வதேச சவாலையும் தடுப்பதன் மூலமே இந்த இலக்கு அடையப்பட முடியும்.

அமெரிக்கா ஈராக்கின் மீது யுத்தம் செய்யும்போது வெள்ளை பொஸ்பரஸ் மற்றும் செறிவு குறைந்த யுரேனியத்தையும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தியது என்ற உண்மையை எடுத்துக்கொண்டால், இராசயான ஆயுதங்களைப் பயன்படுத்துவது பற்றி உலகுக்கு விவுரையாற்றக் கூடிய கடைசி நபர் அமெரிக்க ஜனாதிபதியே. எல்லாவற்றுக்கும் மேலாக, அல்கொய்தா தொடர்புடையவை உட்பட, ஜனாதிபதி பஷிர் அல் அசாத்தின் ஆட்சிக்கு எதிராகப் போராடி வரும் சக்திகளை அமெரிக்கா ஆதரிக்கின்றது. இந்த சக்திகள், அமெரிக்க தலைமையிலான படையெடுப்புக்கு சாக்குப்போக்கை உருவாக்குவதன் பேரில் அத்தகைய ஆயுதங்களை பயன்படுத்துவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிரியாவில் புரட்சி என சொல்லப்படுவது உண்மையில் அத்தகையதல்ல. அமெரிக்காவும் அதன் வளைகுடா பங்காளிகளும், லிபியா மற்றும் ஈராக்கில் செய்ய முயற்சித்தது போல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மை அரசாங்கத்தால் அசாத் ஆட்சியை பதிலீடு செய்யவதன் பேரில் ஜிஹாத் குழுக்கள், முன்னாள் இராணுவ அலுவலர்கள் மற்றும் சி.ஐ.ஏ. சொத்துக்களுக்கும் நிதி வழங்குகின்றன. அசாத் உடன் கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டிய கடமை சிரியத் தொழிலாள வர்க்கத்துடையதே அன்றி, அமெரிக்க மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களது பணி அல்ல.

அமெரிக்காவுக்குள், ஐந்தாண்டுகால பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை அடுத்து, வெடிக்கும் நிலையை அடைந்துள்ள சமூகப் பதட்ட நிலைமைகளை திசை திருப்ப வேண்டிய தேவையும், மற்றும் அமெரிக்க புலனாய்வு முகவர்களின் சட்டவிரோத ஒற்றுக் கேட்டல்களுக்கு விரோதமான எதிர்ப்பையும் நசுக்க வேண்டிய தேவையும் அமெரிக்காவுக்கு இருக்கின்றது.

ஒபாமாவின் ஆசியாவுக்கு "மீண்டும் திரும்புதலின்" கீழ், அமெரிக்கா திட்டமிட்டு சீனாவை சுற்றி வளைக்க செயற்படுவதோடு அதை அமெரிக்க பூகோள மேலாதிக்கத்துக்கு தடையாக வளர்வதில் இருந்து தடுக்கின்றது. அத்தகைய சூழ்நிலையில், சிரியாவுக்கு எதிரான போர், மத்திய கிழக்கில் மட்டுமன்றி, உலகம் பூராவும் மோதலை வெடிக்கச் செய்வதற்கு அச்சுறுத்துகிறது.

ஏகாதிபத்திய சக்திகள் மனிதகுலத்தை முதலாம் உலக யுத்தத்துக்குள் தள்ளி கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளும், இரண்டாம் உலக யுத்தம் வெடித்து சுமார் 75 ஆண்டுகளும் ஆகியுள்ள நிலையில், மனிதகுலம் ஆழம் காணமுடியாத விளைவுகளுடன் மூன்றாம் உலக யுத்த ஆபத்தை நேருக்கு நேர் சதந்திக்கின்றது.

ஒரு தசாப்தத்துக்கும் மேலான இரத்தக்களரி யுத்தங்கள், ஆக்கிரமிப்புகள் மற்றும் ஆளில்லா விமானக் கொலைகளின் பின்னர், அமெரிக்கா மற்றும் பெரிய பிரித்தானியா உட்பட உலக வெகுஜனங்கள் இன்னொரு ஏகாதிபத்திய யுத்தத்தை கடுமையாக எதிர்க்கின்றனர். பிரிட்டிஷ் பாராளுமன்ற வாக்கெடுப்புக்கும் ஏற்கனவே யுத்தத்துக்கு முடிவெடுத்துள்ள ஒபாமா நிர்வாகத்தின் குழப்பத்துக்கும் பின்னால் இருப்பது இதுவே. ஆனால் உலக மக்களால் யுத்தத்தை தடுப்பதற்கு பாராளுமன்றங்கள், அமெரிக்க காங்கிரஸ் அல்லது ஐக்கிய நாடுகள் சபை மீதோ நம்பிக்கை வைக்க முடியாது.

சாதாரண மக்களின் முதுகுக்குப் பின்னால், தெற்காசிய பிராந்தியமும் இப்போது தவிர்க்க முடியாமல் மையங்கொள்ளும் ஏகாதிபத்திய போருக்குள் இழுக்கப்பட்டு வருகின்றது. இலங்கை ஜனாதிபதி இராஜபக்ஷ, சீனாவுடனான தனது உறவுகளை கைவிடுமாறு கோரும் அமெரிக்கத் தலைமையிலான மேற்கத்தைய சக்திகளின் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்துக்கு ஆதரவளித்த பின்னர், அவர்கள் இராஜபக்ஷ மீது அழுத்தத்தை திணிப்பதற்காக யுத்தக் குற்ற விவகாரங்களை போலியாக பற்றிக்கொண்டுள்ளனர்.

பிரதமர் மன்மோகன் சிங்கின், இந்தியாவின் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கமும், சீனாவுக்கு எதிரான அமெரிக்க-இந்திய மூலோபாய பங்கிணைப்பின் பாகமாக சிரியாவுக்கு எதிராக வாஷிங்டனுடன் அணிசேர வேண்டிய அழுத்தத்தின் கீழ் உள்ளது.

ஏகாதிபத்திய போரை நிறுத்தக்கூடிய ஒரே சமூக சக்தி சர்வதேச தொழிலாள வர்க்கமே. சிரியாவுக்கு எதிரான அமெரிக்க யுத்த உந்துதலுக்கு எதிராக வெகுஜனப் போராட்டங்கள் மற்றும் ஏனைய வடிவிலான எதிர்ப்புக்களையும் ஏற்பாடு செய்யுமாறு இலங்கையிலும் தெற்காசியா முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

யுத்தத்துக்கு எதிரான போராட்டமானது தொழில் மற்றும் வாழ்க்கைத் தரங்களை அழிப்பதற்கு, முதலாளித்துவ அரசாங்கங்களின் சிக்கன நடவடிக்கைகளுக்கு மற்றும் ஜனநாயக மற்றும் சமூக உரிமைகளை நசுக்குவதற்கும் எதிரான போராட்டத்துடன் பிணைக்கப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, முதலாளித்துவ அமைப்பு முறையை சோசலிசத்தால் மாற்றீடு செய்வதையும் வர்க்க சுரண்டல் மற்றும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு முடிவுகட்டுவதையும் இலக்காகக் கொண்ட ஒரு வெகுஜன அரசியல் கட்சி தொழிலாள வர்க்கத்துக்கு அவசியம்.

சோசலிச சமத்துவக் கட்சி மற்றும் உலகம் முழுவதும் உள்ள அதன் சகோதரக் கட்சிகள் உட்பட, உலக ட்ரொட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் பகுதிகளும், இந்த போராட்டத்திற்காக சர்வதேச தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்ட போராடிக்கொண்டிருக்கின்றன.

## சோசக பிரச்சார குழு யாழ்பாணத்தில் சோசலிச வேலைத்திட்டம் தொடார்பாக கலந்துரையாடுகிறது

**நமது நிருபர்கள்**
**4 செப்டெம்பர் 2013**

சோசலிச சமத்துவக் கட்சியின்(சோசக) பிரச்சார குழுக்கள், அண்மையில் காரைநகார் தீவு பகுதியிலும் யாழ்ப்பாண நகரத்தை அன்டிய கிராமங்களான கோண்டாவில் கிழக்கு, சுண்டிக்குழி மற்றும் கச்சேரியடியிலும் பிரதேசவாசிகளுடன் கலந்துரையாடின.

சோசக எதிர்வரும் செப்டெம்பர் 21ம் திகதி நடைபெறவிருக்கக்கும் வட மகாகணசபை தேர்தலில் யாழ்மாவட்டத்தில் 19 வேட்பாளர்களை களமிறக்கியுள்ளது.

இந்த பிரச்சார குழுகள், சோ.ச.கவின் தோர்தல் விஞ்ஞாபனத்தின் பல்லாயிரகணக்கான பிரதிகளை விநியோகித்து, கட்சியின் சர்வதேச சோசலிச முன்நோக்கு தொடர்பாக தொழிலாளர்கள் இளைஞர்கள் விவசாயிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடின.

காரைநகர் தீவும் அதை அன்டிய கிராமங்களும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 26 வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட நீண்ட கொடூர யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டவையாகும். சாதாரண தமிழ் மக்கள் போரின் வடுக்களை சுமந்திருப்பதோடு இலங்கை பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களாலும் ஷெல் தாக்குதல்களாலும் சேதமாக்கப்பட்ட

தொடர்ச்சி 3ம் பக்கம்

## சோசலிச சமத்துவக் கட்சியின் ...

*முன்பக்கத் தொடர்ச்சி...*

தேர்தல் நடத்த வாஷிங்டனும் புது டில்லியும் விடுக்கும் கோரிக்கைகளுக்கும் இடையில் சிக்கிக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவுக்கு தீவில் உள்ள தமிழர்களின் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமாக கொஞ்சமும் அக்கறை கிடையாது. வாஷிங்டன் இராஜபக்ஷவின் யுத்தத்தை ஆதரித்ததோடு 2009ல் தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்காக இலங்கை இராணுவத்துக்கு உதவியது. அதன் பின்னரே, சீனாவிடம் இருந்து தன்னை தூர விலக்கிக்கொள்ளுமாறு இராஜபக்ஷவை நெருக்குவதன் பேரில் கொழும்பின் யுத்தக் குற்றங்கள் சம்பந்தமாக அமெரிக்கா தனது மட்டுப்படுத்தப்பட்ட விமர்சனங்களை முன்வைக்கத் தொடங்கியது.

இலங்கையில் அமெரிக்காவின் இராஜதந்திர தலையீடுகள், சீனாவின் செல்வாக்கை கீழறுப்பதற்கும் யுத்தத்திற்கான தயாரிப்பிற்கும் அது இந்து-பசுபிக் பூராவும் முன்னெடுக்கும் மூலோபாயத்தின் பாகமாகும். கடந்த நான்கு ஆண்டுகளாக, அமெரிக்க கூட்டணிகளை பலப்படுத்தியுள்ள ஒபாமா நிர்வாகம், ஆஸ்திரேலியா, சிங்கபூர் மற்றும் பிளிப்பைன்சுடனும் புதிய இராணுவ நிலைகொள்ளும் ஒழுங்குகளை ஸ்தாபித்துள்ளதோடு இந்து-பசுபிக் பிராந்தியம் பூராவும் பதட்டங்களை பெருமளவில் உக்கிரமாக்கியுள்ளது. பாகிஸ்தானுக்குள் றோன் (ஆளில்லா விமானம்) தாக்குதல்களுடன் சேர்த்து, அமெரிக்க தலைமையிலான ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பு தொடர்கின்றது. அமெரிக்காவினால் ஊக்குவிக்கப்பட்டுள்ள இந்தியா, சீனா தொடர்பாக மிகவும் மூர்க்கமான நிலைப்பாட்டை எடுத்து, சீன-இந்திய எல்லை முரண்பாட்டுக்கு எரியூட்டியுள்ளது.

நவ சம சமாஜ கட்சி (ந.ச.ச.க.) மற்றும் ஐக்கிய சோசலிச கட்சி (யூ.எஸ்.பீ) போன்ற போலி-இடது அமைப்புகள் உட்பட முழு கொழும்பு அரசியல் ஸ்தாபனமும், சீனாவுக்கு எதிரான அமெரிக்க யுத்த திட்டங்கள் பற்றி முற்றிலும் அமைதியாக உள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற பல்வேறு தமிழ் முதலாளித்துவக் கட்சிகள், அமெரிக்காவை ஜனநாயக உரிமைகளின் பாதுகாவலனாக போலியாக முன்னிலைப்படுத்துகின்றன. அதன் மூலம் அவை ஒரு "அரசியல் தீர்வுக்கான", அதாவது கொழும்புடன் ஒரு அதிகாரப் பரவலாக்கல் உடன்பாட்டுக்கான, தமது சொந்த இழிந்த சூழ்ச்சிகளுக்கு ஆதரவு பெற முடியும் என எதிர்பார்க்கின்றன.

சோ.ச.க.யின் தேர்தல் பிரச்சாரமானது இந்த மௌனச் சதியை உடைப்பதையும் தெற்காசியா மற்றும் உலகம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கத்துடனான ஐக்கியத்தில், ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் இராணுவவாதத்துக்கும் எதிராக உழைக்கும் மக்களையும் இளைஞர்களையும் அணிதிரட்டுவதை இலக்காக் கொண்டது.

### மாகாணசபை தேர்தல்

பேரழிவுகரமான விளைவை ஏற்படுத்திய இலங்கை உள்நாட்டு யுத்தம் சம்பந்தமாகவும் இந்த தேர்தல் பிரச்சாரத்தில் முழு மௌனம் காணப்படுகிறது. அரைவாசிக்கும் அதிகமான இலங்கை இராணுவம் வடக்கில் நிலைகொண்டுள்ளதோடு, மாகாணசபை தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் அதை பொருட்படுத்தாமல் மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்திலும் இறுக்கமான பிடியை தொடர்ந்தும் பேணும். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையிலேயே இருப்பதோடு எந்தவொரு நிரந்தரமான இருப்பிடமோ அல்லது வாழ்வாதாரமோ இன்றி வாழத் தள்ளப்பட்டுள்ளன. 4,000 க்கும் அதிகமான குடும்பங்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலான அகதி முகாம்களில் போதுமான உணவு, சுகாதார வசதி அல்லது தமது பிள்ளைகளுக்கு பாடசாலை வசதகள் இன்றி வாழ்கின்றன. இராணுவத்தின் பயன்பாட்டுக்காகவும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காவும் பத்தாயிரக்கணக்கான நிலங்கள் வேலியிடப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தினதும் அதன் கூட்டணி பங்காளிகளதும் பிரச்சாரம் பொய்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இராணுவம் எந்தவொரு யுத்தக் குற்றத்தையோ அல்லது ஜனநாயக உரிமை மீறலையோ செய்யவில்லை என இராஜபக்ஷ முழுமையாக மறுக்கின்றார். யுத்தம் முடிந்த பின்னர் "சமாதானத்தையும் சுபீட்சத்தையும" கொண்டுவருவதாக அவர் கொடுத்த வாக்குறுதிகள் முற்றிலும் மோசடியானவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. வியாபாரக் கும்பலின் தட்டினர், குறிப்பாக ஊகவாணிபர்களும் அரசாங்கத்தின் கூட்டாளிகளும் இலாபத்தை குவித்துக்கொண்டுள்ள போதிலும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்களுமாக பரந்த பெரும்பான்மை உழைக்கும் மக்கள் தமது வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியுறுவதையே கண்டுள்ளனர். வாழ்க்கைச் செலவு ராக்கட் வேகத்தில் உயர்ந்துள்ள நிலையிலும் கூட, அரசாங்கம் சம்பள அதிகரிப்பு நிறுத்தத்துக்கு சமமான ஒன்றை அமுல்படுத்தியுள்ளது.

எதிர் கட்சிகளான யூ.என்.பீ. மற்றும் மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பீ.) அரசாங்கத்தின் சந்தை-சார்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் எந்தவொரு அடிப்படை முரண்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. இரு கட்சிகளும் இராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்தத்தை கடைசிவரை ஆதரித்ததுடன் அதன் யுத்தக் குற்றங்களையும் தொடர்ந்தும் மூடி மறைக்கின்றன. யூ.என்.பீ. தன்னை ஜனநாயகத்தின் பாதுகாவலனாக காட்டிக்கொள்வதை போலி இடதுகளான ந.ச.ச.க.வும் ஐக்கிய சோசலிசக் கட்சியும் கலைப்பின்றி தூக்கிப் பிடிக்கின்றன. இந்தக் கூற்றை தொழிலாளர்களும் இளைஞர்களும் ஏளனமாக நிராகரிக்க வேண்டும். அரசாங்கத்தைப் போலவே, யூ.என்.பீ.யும் சிங்கள மேலாதிக்கவாதத்தில் ஊறிப்போயுள்ளதோடு யுத்தத்தை தொடங்கி முன்னெடுத்தமைக்கு அது முழு பொறுப்பாளியாகும். அரசியல் அதிகாரத்துக்கான போராட்டத்தில், தொழிலாள வர்க்கமும் அதற்குப் பின்னால் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களும் சுயாதீனமாக அணிதிரள்வதை தடுப்பதில் இந்த போலி இடதுகள் நீண்டகாலமாக பங்கெடுத்து வந்துள்ளன.

பல்வேறு தமிழ் முதலாளித்துவக் கட்சிகளில் எதுவும் எந்தவொரு மாற்றீட்டையும் முன்வைக்கவில்லை. அவர்கள் அனைவரும், தொழிலாள வர்க்கத்துக்கு மாபெரும் அழிவை நிரூபித்த தமிழ் இனவாத அரசியலிலேயே தொடர்ந்தும் காலூன்றிக்கொண்டுள்ளனர். அவர்கள், மாகாண சுயாட்சியானது உழைக்கும் மக்களின் நிலைமைகளை மேம்படுத்துவதோடு திட்டமிட்ட ஜனநாயக உரிமை மீறல்களுக்கு முடிவுகட்டும் என்ற பொய்யை ஏதாவதொரு வகையில் தூக்கிப் பிடிக்கின்றனர். யதார்த்தத்தில் இந்தக் கட்சிகள், கொழும்பு ஸ்தாபனத்துடன் ஒரு அதிகாரப் பரவலாக்கல் ஒழுங்கின் ஊடாக மது சிறப்புரிமைகளை தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கும் கைக்கூலி தமிழ் முதலாளித்துவத் தட்டின் நலன்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றன.

யுத்தத்தின் கடைசி ஆண்டுகளின் போது, புலிகளின் ஊதுகுழலாக செயற்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இப்போது சலுகைகள் வழங்குமாறு இராஜபக்ஷ அரசாங்கத்தை நெருக்குவதற்காக அமெரிக்கா, இந்தியா மற்றும் ஏனைய சக்திகளிடம் கெஞ்சுகின்றது. சர்வதேச ஆதரவை பெறும் ஒரு முயற்சியாக, கூட்டமைப்பு முதலமைச்சருக்கான தனது வேட்பாளராக கொழும்பு ஸ்தாபனத்தின் ஒரு உறுப்பினரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியுமான சி.வி. விக்னேஸ்வரனை தேர்வு செய்துள்ளது. சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு கருத்துத் தெரிவித்த அவர், "இந்த குறிப்பிட்ட காலத்தில், அரசாங்கத்துடன் இந்தியாவுடன் மற்றும் வெளிநாடுகளுடனும் விவகாரங்களை கலந்துரையாடக் கூடிய ஒரு நபர் ஜமுதலமைச்சராகஸ அங்கிருப்பது அவசியம்," என்றார்.

### உள்நாட்டு யுத்தத்தின் படிப்பினைகள்

சுமார் மூன்று தசாப்தங்களாக தீவை நாசம் செய்த யுத்தம் பற்றிய ஒரு அரசியல் இருப்புநிலை ஏட்டை வரைத்துகொள்வது அவசியமாகும். இந்த மோதல் துன்பகரமான அதே வேளை, உழைக்கும் மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை திருப்திபடுத்துவதில் பின்தங்கிய நாடுகளில் உள்ள முதலாளித்துவம் முற்றிலும் இலாயக்கற்றது, என்ற லியோன் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படை கருத்தை மறுக்க முடியாமல் நிரூபித்துள்ளது. ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு, சோசலிசத்துக்கும் தொழிலாளர் ஆட்சிக்குமான ஒரு சுயாதீன புரட்சிகர போராட்டத்தின் பாகமாக, தொழிலாள வர்க்கத்திடமே விடப்படுகிறது.

பல தசாப்தங்களாக ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள், உழைக்கும் மக்களை பிளவுபடுத்தவும் தமது ஆட்சிக்கு எதிரான எந்தவொரு சவாலையும் திசை திருப்பவும் தமிழர்-விரோத பாரபட்சங்களையும் படுகொலைகளையுமே நாடி வந்துள்ளன. ஆனால் போருக்கான பாதை தவிர்த்திருக்க முடியாதது அல்ல. இலங்கை முதலாளித்துவத்தின் பிரிவினை இனவாதத்தை எதிர்த்த ட்ரொட்ஸ்கிஸ இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி (பி.எல்.பீ.ஐ.), அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இலங்கையிலும் இந்திய துணைக் கண்டம் பூராவும் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்துக்காகப் போராடியது. லங்கா சமசமாஜக் கட்சிக்குள் பி.எல்.பீ.ஐ. கரைத்து விடப்பட்டமையும், அதன் பின்னர் சமசமாஜக் கட்சி சீரழிந்து 1964ல் சிறிமா பண்டாரநாயக்கவின் முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க.) அரசாங்கத்தில் இணைந்து காட்டிக்கொடுத்தமையும், தொழிலாள வர்க்கத்தினுள் பெரும் குழப்ப நிலையை உருவாக்கி விட்டதோடு இனவாத அரசியல் தலைநீட்ட அனுமதித்தது.

இரண்டாவது ஸ்ரீ.ல.சு.க.-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சி கூட்டரசாங்கம், 1972 அரசியலமைப்பை அமுல்படுத்தி பௌத்தத்தை அரச மதமாக்கியதோடு தொழில், கல்வி மற்றும் வர்த்தகத்திலும் தமிழர்களுக்கு எதிராக பாரபட்சங்களை செய்ததன் மூலம், இனவாத பதட்டங்களுக்கு எண்ணெய் வார்த்தது. தனது பிற்போக்கு சந்தை-சார்பு நிகழ்ச்சி நிரல் மீதான எதிர்ப்பை பிளவுபடுத்துவதற்கு திக்கற்றிருந்த அடுத்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி (யூ.என்.பீ.) அரசாங்கம், அடுத்தடுத்து தமிழர்-விரோத ஆத்திரமூட்டல்களை நாடியதோடு, மோதலின் ஆரம்பத்தைக் குறித்த 1983 இனப் படுகொலையில் உச்சகட்டத்தை அடைந்தது. பத்தாயிரக்கணக்கான பொது மக்களின் உயிர்களைப் பலிகொண்ட இரத்தக் களரியுடன் 2009ல் முடிவுக்கு வந்த யுத்தத்தை ஸ்ரீ.ல.சு.க. மற்றும் யூ.என்.பீ.யும் ஈவிரக்கமற்று முன்னெடுத்தன.

புலிகளின் தோல்வியானது அடிப்படையில் இராணுவப் பலவீனத்தால் ஏற்பட்டதல்ல, மாறாக, அதன் தமிழ் பிரிவினைவாத வேலைத்திட்டத்திலேயே உள்ள குறைபாட்டில் இருந்து தோன்றியதாகும். ஆரம்பத்தில் இருந்தே, இந்தியா அல்லது ஏனைய சக்திகளின் ஆதரவுடன் தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு முதலாளித்துவ அரசை செதுக்கிக்கொள்வதே அதன் இலக்காக இருந்தது. மாகாணசபை முறைமையை ஸ்தாபித்த 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையே, இந்திய அரசாங்கம் மற்றும் அதன் "அமைதிப் படை" மீதும் நம்பிக்கை வைத்த புலிகளையும் மற்றும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுகளையும் அழிவுகரமாக அம்பலப்படுத்திவிட்டது. புது டில்லி ஆரம்பத்தில் இருந்தே, இந்தியாவில் அமைதியின்மையை தூண்டிவிட அச்சுறுத்திய தமிழ் கிளர்ச்சியை நசுக்குவதை இலக்காக் கொண்டிருந்தது. ஆயினும், இந்த கசப்பான அனுபவங்களில் இருந்து புலிகள் எதையும் கற்றுக்கொள்ளாததோடு தொடர்ந்தும் இந்திய முதலாளித்துவத்திடம் ஆதரவை எதிர்பார்த்தது.

புலிகள், ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் இயலுமை கொண்ட ஒரே சமூக சக்தியான தொழிலாள வர்க்கத்தை திசையமைவுகொள்ளவில்லை. தமிழ் மற்றும் சிங்கள தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதற்கான எந்தவொரு முயற்சியையும் கசப்புடன் எதிர்த்த புலிகள், கொழும்பு அரசாங்கங்களின் குற்றங்கள் அனைத்துக்கும் "சிங்கள மக்களை" குற்றம் சாட்டினர். சிங்கள பொது மக்கள் மீதான அவர்களின் கண்மூடித்தனமான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், கொழும்பு ஸ்தாபனத்தின் கைகளில் நேரடியாகப் பயன்பட்டதோடு இனவாத பிளவை ஆழப்படுத்தின. தமது கட்டுப்பாட்டில் இருந்த பிராந்தியத்துள், புலிகள் மேலும் மேலும் ஜனநாயக-விரோத ஆட்சி முறையை நாடினர். இதன் விளைவாக, 2009ல் தமக்கிருந்த தற்பாதுகாப்பு நொறுங்கிய நிலையில், தீவிலும் உலகம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கம் ஒரு புறம் இருக்க, புலிகள் தமிழ் வெகுஜனங்களுக்கு எந்தவொரு அறைகூவலும் விடுக்க இலாயக்கற்றவர்கள் ஆயினர். அவர்கள், இலங்கை இராணுவத்துக்கு ஆதவளித்து, உதவி செய்து, ஆயுதமும் வழங்கிய அதே சக்திகளுக்கு, அதாவது "சர்வதேச சமூகத்துக்கு" பயனற்ற வேண்டுகோள் விடுக்கத் தள்ளப்பட்டனர்.

ஆட்சியில் இருந்த கொழும்பு அரசாங்கங்கள் முன்னெடுத்த இரத்தக்களரி மிக்க யுத்தத்தை உறுதியாக எதிர்த்ததோடு வடக்கு மற்றும் கிழக்கில் இருந்த துருப்புக்களை நிபந்தனையின்றி உடனடியாக வெளியேற்றக் கோரும் ஒரே கட்சி சோ.ச.க. மட்டுமே ஆகும். தெற்காசியா மற்றும் சர்வதேச ரீதியிலும் சோசலிச குடியரசு ஒன்றியங்களின் பாகமாக, ஸ்ரீலங்கா-ஈழம் சோசலிச குடியரசுக்கான போராட்டத்தில், சகலவிதமான தேசியவாதம் மற்றும் பேரினவாதங்களுக்கும் எதிராக தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்த நாம் இடைவிடாமல் போராடியுள்ளோம்.

### சோ.ச.க. பிரச்சாரத்துக்கு ஆதரவளியுங்கள்

எமது வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு தொழிலாளர்களுக்கும் இளைஞர்களுக்கும் சோ.ச.க. அழைப்பு விடுக்கின்றது. எவ்வாறெனினும், எல்லாவற்றுக்கும் மேலாக, சோசலிச கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு தொழிலாளர்களதும் விவசாயிகளதும் அரசாங்கம் ஒன்றுக்கான போராட்டத்தில், சகல முதலாளித்துவ கன்னைகளிலும் இருந்து சுயாதீனமாக தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் அணிதிரட்டுவதே எமது பிரச்சாரத்தின் இலக்காகும்.

ஏற்கனவே வர்க்கப் போராட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. பொதுத் துறை தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரியும், மானியங்கள் வெட்டுக்கு எதிராக விவசாயிகளும் மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக மீனவர்களுமாக வெகுஜனங்கள் மேலும் மேலும் எதிர்ப்புக்களிலும் வேலை நிறுத்தங்களிலும் மற்றும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடும் நிலைமையை அரசாங்கம் ஏற்கனவே எதிர்கொண்டுள்ளது. இலவசக் கல்வி மீதான தாக்குதல்களுக்கு எதிராக பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அரசாங்கம் தமிழர்-விரோத மற்றும் முஸ்லிம்-விரோத பேரினவாதத்தை கிளரிவிடுவதன் மூலமே இந்த எதிர்ப்பை பிளவுபடுத்தவும் திசை திருப்பவும் முயற்சிப்பதோடு, எந்தவொரு எதிர்ப்பையும் நசுக்குவதற்காக தசாப்தகால யுத்தத்தின் போது கட்டியெழுப்பப்பட்ட பொலிஸ் அரச வழிமுறைகளை நாடுகிறது.

தமது அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக இலங்கை உழைக்கும் மக்கள் முன்னெடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கையானது வளர்ச்சிகண்டுவரும் தொழிலாள வர்க்கத்தின் சர்வதேசிய எதிர்ப்புக்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் புரட்சிகர போராட்டங்களதும், எல்லாவற்றுக்கும் மேலாக எகிப்திய போராட்டங்களதும் பாகமாகும். ஆயினும், அவை எவ்வளவு உறுதியானவையாகவும் பெரிதானவையாகவும் இருந்தாலும், இத்தகைய ஆரம்ப வர்க்கப் போராட்டங்கள் தொழிலாள வர்க்கத்தினுள் ஆழமான அரசியல் முன்னோக்கு நெருக்கடியை வெளிப்படுத்தியுள்ளது. நனவுப்பூர்வமான புரட்சிகர தலைமைத்துவம் இன்மையால், தொழிலாள வர்க்கம் பின் தள்ளப்பட்டுள்ள அதே வேளை, கிரேக்கத்தில் சிரிசா, எகிப்தில் புரட்சிகர சோசலிஸ்ட் போன்ற பல்வேறு போலி இடதுகளின் ஒத்துழைப்புடன் ஆளும் வர்க்கங்களாலும் அவற்றின் அரசியல் கட்சிகளாலும் தொடர்ந்தும் நிலைத்திருக்க முடிவதோடு அவை தமது ஆட்சியையும் பேணிக்கொள்கின்றன.

இலங்கையில் சோ.ச.க.யின் தேர்தல் பிரச்சாரம், சோசலிச புரட்சிக்கான உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சகோதரக் கட்சிகள் முன்னெடுத்துவரும் கூட்டுப் போராட்டத்தின் பாகமாகும். அதன் இலக்கு, எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிலாள வர்க்கத்தின் புதிய புரட்சிகர தலைமைத்துவம் கட்டியெழுப்பப்பட வேண்டிய சோசலிச மற்றும் அனைத்துலகவாத வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதே ஆகும்.

சோ.ச.க.யின் முன்னோடி, சமசமாஜக் கட்சியின் காட்டிக்கொடுப்புக்கு எதிராக, 1968ல் ஸ்தாபிக்கப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆகும். அது, ஸ்டாலினிசம் மற்றும் சகல வடிவிலான தேசிய சந்தர்ப்பவாதங்களுக்கும் எதிராக, ட்ரொட்ஸ்கிசத்தின், அதாவது புரட்சிகர மார்க்சிஸத்தின் விஞ்ஞானப்பூர்வமான வேலைத்திட்டம் மற்றும் முன்னோக்குக்கான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டது.

எல்லா வழிகளிலும் எமது பிரச்சாரத்துக்கு ஆதரவளிக்குமாறு நாம் தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கும் அழைப்புவிடுக்கின்றோம்.

### சோசலிச சமத்துவக் கட்சியின் கோரிக்கைகள்:

வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

ஸ்ரீலங்கா-ஈழம் சோசலிச குடியரசை ஸ்தாபிக்க ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டுவதற்கு சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் தொழிலாளர்களின் ஒரு ஐக்கியப்பட்ட போராட்டத்தை முன்னெடு!

அமெரிக்க யுத்த உந்துதலை நிறுத்து! தெற்காசியாவிலும் உலகம் பூராவும் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்துக்காக முன்நோக்கி செல்!

சோசலிச சமத்துவக் கட்சிக்கு வாக்களிப்பதோடு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை சோசலிச புரட்சிக்கான உலகக் கட்சியாக கட்டியெழுப்ப அதில் இணைந்துகொள்ளுங்கள்!

## சோசக பிரச்சார குழு...

*முன் பக்கத் தொடர்ச்சி*

கட்டிடங்களின் மிச்ச சொச்சங்கள் இன்றும் காணக்கூடியவையாக உள்ளன.

யுத்தத்தின் போது தனது பயங்கரமான அனுபவத்தை விளக்கிய கோண்டாவில் கிராமத்தை சேர்ந்த ஒரு விவசாயி கூறுகையில், "ஆயிரகணக்கான மக்கள் தமது உயிரை இழந்தனர். உயிர் தப்பியவர்கள் பல தலைமுறைகளாக அல்லது பல வருடங்களாக உழைத்து சம்பாதித்த அனைத்தையும் இழந்தனர். இந்த கிராமத்தில் மாத்திரம் சுமார் 60 வீடுகள் விமான தாக்குதலால் அழிக்கப்பட்டன. பழைய வாழ்க்கையை மீளமைப்பது எவ்வாறு என கற்பனையும் செய்யமுடியாது. சிலவற்றை ஒருபோதும் மீளப்பெறமுடியாது. ஷெல் தாக்குதலில் நான் ஒரு காலை இழந்துவிட்டேன்," என்றார்.

அதே கிராமத்தை சேர்ந்த இன்னுமொரு விவசாயி, தாம் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக விளக்கினார். குடும்ப செலவுகளை சமாளிப்பதற்கான வருமானம் அவருக்கு இல்லை. விவசாய உபகரணங்களின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளது. "ஒரு சிறிய துண்டு காணியில் விவசாயம் செய்ய பெரும் தொகையான பணம் தேவை. எமக்கு எமது உற்பத்தி செலவினை மிளப்பெற்று கடனை கூட செலுத்த முடியாது", என அவர் விளக்கினார். அவருக்கு பிரதான தமிழ் முதலாளித்துவ கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட எந்த அரசியல் கட்சியிலும் நம்பிக்கை இல்லை என்றும், வாக்களிக்காமல் இருப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் தனது அனுபவத்தை குறிப்பிட்ட ஒரு தச்சுத் தொழிலாளி, அங்கு இலங்கை அரசாங்கத்தில் இருக்கும் ஜனநாயகத்துக்கு மேலாக ஒன்றும் இல்லை, என்றார். "எனது கல்வி புலிகளால் பாழாக்கப்பட்டது. அவர்களது பாதுகாப்பு அரண்களில் சேவை ஆற்றுமாறு நாம் நிர்பந்திக்கப்பட்டோம். நாங்கள் மறுத்தால் அவர்கள் அடிப்பார்கள். இதனால் எனது க.பொ.த சாதாரணதர பாரீட்சையை பூர்த்தி செய்ய முடியவில்லை. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து மக்கள் வெளியில் வர அனுமதியின்றி பெரும் சிரமப்பட்டனர். சிலர் சுட்டும் கொல்லப்பட்டனர்," என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அடக்குமுறையால் பலர் புலிகளின் கொள்கைகளுக்கு எதிராக இருந்த போதிலும் வெளிப்படையாக பேச முடியாமல் இருந்தனர், என அவர் கூறினார். அவர்கள் தோல்வியடைவதற்கு இதுவும் ஒரு காரணம் என குறிப்பிட்ட அவர், "புலிகளின் தோல்வியானது அவர்களது இராணுவ பலவீனத்தால் நேர்ந்தது அல்ல, அவர்களது பிரிவினைவாத அரசியலால் நேர்ந்ததே என்ற உங்களது நிலைப்பாட்டினை நான் எற்றுக்கொள்ளுகின்றேன்," என்றார்.

பிரதான அரசியல் கட்சிகள் தொடர்பாக பெரும்பான்மையான மக்கள் தமது விரக்தியையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தினர். யாழ்ப்பாணம் சுண்டிக்குழியை சேர்ந்த ஒரு இளைஞன், "அரசியல்வாதிகள் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் வருவார்கள் பின்னர் காணாமல் போய் விடுவார்கள்" என்றார். பிரச்சார குழுவினர், சோசக இதற்கு மாறானது என்பதையும், அது தொழிலாளர்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் ஒரு புதிய முன்னோக்ககிலும் புரட்சிகர கட்சியிலும் அணிதிரட்டி அவர்களை ஆயுதபாணிகளாக்க போராடுகிறது என தெளிவுபடுத்தினர். அவர் சோசக வின் தேர்தல் விஞ்ஞாபனத்ததை வாசிப்பதற்கு உடன்பட்டார்.

பூச்சாடி உற்பத்தி செய்யும் இளைஞன் றீகன், அவருடைய மனைவிக்கு வேறு ஒரு பிரதேசத்தில் சொந்த நிலமும் வீடும் இருந்தாலும், தாம் 4,500 ரூபா வாடகையில் இங்கு குடி இருப்பதாக குறிப்பிட்டார். அவருடைய மனைவியின் வீடு, இராணுவம் வரையறுத்துக்கொண்டுள்ள "உயர் பாதுகாப்பு வலயத்தில்" அமைந்துள்ளது.

அவர் அமெரிக்காவின் "ஆசியாவுக்கு மீண்டும் திரும்பும்" திட்டத்தைப் பற்றி கலந்துரையாடுவதில் அக்கறை காட்டினார். ஆமெரிக்காவின் சிரியாவிற்கு எதிரான யுத்தத்துக்கும் சீனாவிற்கு எதிரான அச்சுறுத்தலுக்கும் எதிராக பேசிய அவர், "அமெரிக்கா அதன் சொந்த நலனுக்காக செயற்படுகிறது. இலங்கையிலும் துறைமுகங்களையும் மற்றைய வசதிகளையும் பயன்படுத்தும் தேவை அதற்கு உள்ளது", என்றார்.

ஒரு தற்காலிக தொழிலாளி சோசகவின் சோசலிச கொள்கைகளை ஏற்றுக்கொண்டாலும், மக்களால் சோசலிசம் வரும் வரை காத்திருக்க முடியுமா என கேட்டார். சோசக அங்கத்தவர்கள், வளர்ச்சியடைந்து வரும் முதலாளித்துவத்தின் உலக பொருளாதார நெருக்கடியானது தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு வரலாற்று சவால் என தெளிவு படுத்தினர். தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச சோசலிச இயக்கத்தை கட்டியெழுப்பி, ஸ்ரீலங்கா–ஈழம் சோசலிச குடியரசிற்காகப் போராடுவதைத் தவிர வேறு மாற்றிடு இல்லை என விளக்கினர்.

"நீங்கள் சொல்வது சரி, ஆனால் அது உடனடி சாத்தியப்பாடில்லை" என அந்த தொழிலாளி கூறினார். பதிலாக தமிழ் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு சில சலுகைகளை கொண்டுவரும் என அவர் குறிப்பிட்டார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஒரு தமிழ் முதலாளித்துவ கட்சி என்றும், அது தொழிலாளர்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் தேவைகளை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. மாறாக, அது தமிழ் முதலாளித்துவ தட்டுக்களின் நலன்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றது, என சோசக உறுப்பினர்கள் விளக்கினர். சோசக தொழிலாள வர்க்கம் அதனுடைய கையில் ஆட்சி அதிகாரத்தை பெறவும், சர்வதேச சோசலிச மூலோபாயத்துக்காகவும் போராடுகிறது என அவர்கள் விளக்கினர்.

யாழ் பல்கலைகழகத்ததிற்கு பிரச்சார குழுவினர் சென்றபோது, மாணவர்கள் அங்குள்ள நிலைமைகளை அம்பலபடுத்தினர். "விரிவுரை அறைகளில் போதிய இடவசதி இல்லை. நூலகத்தில் இட வசதி இல்லை. ஊடகப் பிரிவில் போதிய அளவு கணனிகள் இல்லை" என ஒருவர் குறிப்பிட்டார். "கதிரைகளும் மேசைகளும் உடைந்துள்ளன. பல்கலைகழகத்திற்கு 150 அறைகளை கொண்ட நான்கு விடுதிகள் மட்டுமே உள்ளன. அவைகள் ஒழுங்காக பராமரிக்கப்படுவதில்லை. அங்கு தண்ணீர் வசதி ஒழுங்காக இல்லை," என இன்னொருவர் கூறினார்.

யுத்தம் முடிவடைந்த போதிலும், அரச படைகள் பல்கலைகழகத்தினை இன்னமும் ஆழ்ந்த கண்கானிப்பில் வைத்துள்ளன என அவர்கள் குறிப்பிட்டனர். "பல்கலைகழகத்தில் எமக்கு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க உரிமை இல்லை. புலனாய்வு பிரிவினரும் மாணவர்களின் நடவடிக்கை தொடர்பாக தகவல் சேகரிக்கின்றனர். ஏதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு எமக்கு உரிமையில்லை. இந்த நாட்களில் பல்கலைகழகத்திலிருந்தும் யாழ்ப்பாண நகரிலிருந்தும் பாதுகாப்பு படையினர் தற்காலிகமாக வெளியேறியுள்ளனர். ஏனெனில் இது மாகாணசபைத் தேர்தல் ஜனநாயக முறையிலும் அமைதியான சூழ்நிலையிலும் நடைபெறுகிறது என காட்டுவதற்கான பாசாங்காகும்."

யாழ் பல்கலைகழகத்தின் முகாமைத்துவ பிரிவை சேர்ந்த ஒரு மாணவன், "யார் பிரச்சாரம் செய்தாலும் தமிழ் கூட்டமைப்பு இந்த தேர்தலில் வெற்றி பெறும். யுத்தம் முடிந்து நான்கு வருடம் ஆகியும் நிலைமைகள் அவ்வாறே இருக்கின்றன. ஒரு காலத்தில் புலிகள் ஒரு சக்கிமிக்க இராணுவ அமைப்பாக இருந்தனர். பின்னர் அவர்களுடைய மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளால் பலர் அவர்களை எதிக்கத் தொடங்கினர். சாதாரண சிங்கள மக்கள் மீதான அவர்களது தாக்குதல்கள் அரசாங்கதையே பலப்படுத்தியது. அரசாங்கத்தை தோற்கடிக்க சிங்கள தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவது ஒரு சிறந்த சிந்தனை" என அவர் சோசக வேலைத் திட்டத்தை சுட்டிக் காட்டி கூறினார்.

யாழ்ப்பாணவாசிகள் மத்தியில் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பரந்துபட்ட எதிர்ப்பு இருக்கின்றது. எனினும், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களின் ஒரு பகுதியினர் மத்தியில் தமிழ் கூட்டமைப்பு தொடர்பாக ஒரு குழப்பம் நிலவுகிறது. யாழ்ப்பாணத்ததில் உள்ள கிட்டத்தட்ட அனைத்து ஊடகங்களும், இந்த முதலாளித்துவ கட்சி மாற்றத்தை கொண்டு வரும் அரசாங்கத்தை சவால் செய்யும் என்று கூறிக்கொள்கின்றன.

உண்மையில் தமிழ் கூட்டமைப்பு கொழும்பு அரசாங்கத்துடன் அதிகாரப் பங்கீட்டு உடன்படிக்கையை எதிர்பார்க்கின்றது. அத்தகைய ஒரு ஒப்பந்தத்திற்கு வர ராஜபக்ஷவை நிர்பந்திக்குமாறு அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் இந்தியாவிற்கும் அழைப்பு விடுக்கிறது. இவ்விரு அரசாங்களும் ராஜபக்ஷ அரசாங்கதை பெய்ஜிங்கிடம் இருந்து தூரவிலக்க விரும்புகின்றன. இலங்கையில் தமிழ் மக்கள் அடக்கப்படுவது தொடர்பாக தமிழ்நாட்டில் பாரிய எதிர்ப்பு நிலவுவதால் தமிழ் நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை தொடர்பாகவும் இந்திய அரசு கருத்தில் கொண்டுள்ளது.

ஒரு இறுதி வருட கலைப்பிரிவு மாணவன், நாட்டை அபிவிருத்தி செய்வதாக அரசு கூறுவதை சவால் செய்தார். "அவர்கள் யுத்தத்திற்கு பின்னர் வீதிகளையும் கட்டிடங்களையும் நிறுவுகின்றனர். ஆனால் இந்த அபிவிருத்தி எமது நன்மைக்கு அல்ல. நாங்கள் யுத்த சூழ்நிலையில் வாழ்ந்தது போலவே இன்றும் வாழ்கின்றோம். எங்களால் சுதந்திரமாக பேச முடியாது. அவர்கள் பல்கலைகழகத்தினுள் இலங்கை பொலிஸ் புலனாய்வுத் துறையினரை திணித்துள்ளனர். நாங்கள் எமது கல்வி பிரச்சினை தொடர்பாகவோ அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவோ பேசினால், நாங்கள் விசாரிக்கப்படுவதோடு அச்சுறுத்தலுக்கும் உள்ளாவோம்"என அவர் தெரிவித்தார்.

# பிரிவினைவாத வேலைத்திட்டம்: ஒரு மரண முடிவு

### WSWS கட்டுரை சம்பந்தமான தமிழ்நெட் விமர்சனத்துக்கு ஒரு பதில்

**கே. ரட்நாயக்க**
**31 ஆகஸ்ட் 2013**

உலக சோசலிச வலைத் தளம் (WSWS), "இலங்கை பாதுகாப்புச் செயலாளர் சமூக அமைதியின்மை பற்றி பீதியை வெளிப்படுத்துகிறார்" என்ற தலைப்பில் வெளியிட்ட கட்டுரையை விமர்சித்து தமிழ்நெட் இணையம் பிரசுரித்த ஒரு கருத்துரை, அது பிரதிநிதித்துவம் செய்யும் சமூகத் தட்டுகள், அதாவது தமிழ் முதலாளித்துவ மற்றும் செல்வந்த மத்தியதர தட்டுகள், தொழிலாள வர்க்கத்தின் மீதும் சோசலிசத்துக்கான போராட்டத்தின் மீதும் கொண்டுள்ள வர்க்கப் பகைமையை வெளிப்படுத்துகிறது.

கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியில் கற்கும் இராணுவ அதிகாரிகளுக்கு இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோடாபய இராஜபக்ஷ ஆற்றிய விரிவுரை மீதே உலக சோசலிச வலைத் தள கட்டுரை குவிமையப்படுத்தியிருந்தது. தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்வரவுள்ள எழுச்சியை நசுக்கவும் வடக்கு மற்றும் கிழக்கில் ஒடுக்குமுறை இராணுவ ஆக்கிரமிப்பை பேணுவதற்கும் இராணுவத்தை தயார்படுத்துவதே இந்த விரிவுரையின் குறிக்கோளாகும்.

பெயர் குறிப்பிடாத "யாழ்ப்பாணத்தில் உள்ள ஈழ செயற்பாட்டாளரிடம்" இருந்து மேற்கோள் காட்டியுள்ள தமிழ்நெட் கருத்துரை, வர்க்கப் பிரச்சினை பற்றி உலக சோசலிச வலைத் தள கட்டுரை வலியறுத்துவதற்கு எதிராக, "சுதந்திரத்துக்கான ஈழத் தமிழர்களின் போராட்டத்தை கணக்கில் எடுத்திருந்தால்," அது ஒரு "நாகரீகமான மதிப்பீடாக" இருந்திருக்கக் கூடும் எனப் பிரகடனம் செய்கின்றது.

பின்னர் மிகவும் வெளிப்படையாக தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ள அந்த "செயற்பாட்டாளர்", "ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் அவர்களது வரலாற்று தாயகத்தின் இறைமையை அவரோ அல்லது அவளோ அங்கீகரிக்கின்ற ஒரு நிலைமையில் மட்டுமே, முற்போக்கு சிங்கள அரசியலின் தலைவரை அல்லது புத்திஜீவியை தமிழர்களால் அரசியல் ரீதியில் ஆதரிக்க முடியும்," என எழுதியுள்ளார்.

இந்த விவாதம் வலியுறுத்தும் நச்சுத்தனமான இனவாத அரசியலின் முழு உருவரைவையும் சோசலிச சமத்துவக் கட்சியும், உலக சோசலிச வலைத் தளமும் நிராகரிக்கின்றன. சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் (பு.க.க.), தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை காப்பதிலும் வடக்கு மற்றும் கிழக்கில் கொழும்பு அரசாங்கத்தின் குற்றவியல் யுத்தத்தை எதிர்ப்பதிலும் கறைபடியாத வரலாற்றைக் கொண்டுள்ளன. எனினும், இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் சோசலிசத்துக்கான போராட்டத்தின் பாகமாக, இலங்கை முதலாளித்துவத்தின் சகல பகுதிகளில் இருந்தும் அரசியல் ரீதியாக சுயாதீனமான தொழிலாள வர்க்கத்தின் ஒரு ஐக்கியப்பட்ட அரசியல் இயக்கத்தின் ஊடாக மட்டுமே தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம்களுமாக உழைக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க முடியும் என நாம் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளோம்.

2009 மே மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வியுடன் முடிவுக்கு வந்த நீண்டகால உள்நாட்டு யுத்தத்தின் கசப்பான அனுபவங்களால் சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. "ஈழ செயற்பாட்டாளர்கள்", தமிழ்நெட் மற்றும் பல்வேறு தமிழ் முதலாளித்துவக் கட்சிகளால், யுத்தத்தின் அரசியல் படிப்பினைகளைப் பற்றி முற்றிலும் மௌனமாக இருப்பதன் மூலம் மட்டுமே, ஒருவகையான "சுயநிர்ணயம்", அல்லது தனியான முதலாளித்துவ அரசே தமிழர்களுக்கு ஒரே தீர்வு என்ற பொய்யை கூறித்திரிய முடியும். புலிகள் ஒரு சுதந்திர தமிழ் ஈழத்தை அமைக்கும் முயற்சியையே தமது முழு மூலோபாயமாகக் கொண்டிருந்ததோடு இது உழைக்கும் மக்களுக்கு அழிவையே தோற்றுவித்தது.

யுத்தத்தை தொடங்கி அதை ஈவிரக்கமற்று முன்னெடுத்தமைக்கு ஆட்சியில் இருந்த கொழும்பு அரசாங்கங்களே பொறுப்பு. எனினும், அவற்றின் சிங்கள மேலாதிக்கவாத கருத்தியல் தமிழர்களுக்கு எதிராக மட்டுமன்றி, தொழிலாள வர்க்கத்துக்கும் எதிராகத் திருப்பப்பட்டிருந்தது. தொழிலாளர்களதும் வெகுஜனங்களதும் எதிர்ப்புக்கு முகங்கொடுத்த ஐக்கிய தேசியக் கட்சி (யூ.என்.பீ.) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீ.ல.சு.க.) அரசாங்கங்கள் தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்தவும் முதலாளித்துவ ஆட்சியை பாதுகாக்கவும் தமிழர்–விரோத இனவாதத்தை இடைவிடாமல் கிளறிவந்தன.

சோசலிச மற்றும் சர்வதேசியவாத முன்னோக்கின் அடிப்படையில், பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக இலங்கை மற்றும் துணைக் கண்டத்தில் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்த 1940களில் ட்ரொட்ஸ்கிச இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி (பி.எல்.பீ.ஐ.) போராடியது. கிளர்ச்சியடைந்த தொழிலாள வர்க்கத்தை எதிர்கொண்ட யூ.என்.பீ. அரசாங்கம், 1948ல் உத்தியோகபூர்வமாக சுதந்திரம் பெற்றவுடன் எடுத்த முதல் நடவடிக்கை, ஒரு மில்லியன் தமிழ் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையை அபகரித்ததே ஆகும். இந்த பிற்போக்கு பிரஜா உரிமைச் சட்டத்துக்கு ஆதரவளிக்க ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் எடுத்த முடிவில், தொழிலாள வர்க்கத்தின் மீதான தமிழ் முதலாளித்துவத்தின் பகைமை சுருக்கமாக வெளிப்படுத்தப்பட்டது.

லங்கா சமசமாஜக் கட்சிக்குள் பி.எல்.பீ.ஐ. கரைத்துவிடப்பட்டமையும் அதன் பின்னர் அது அரசியல் ரீதியில் பின்வாங்கியமையும், தொழிலாள வர்க்கத்துக்கு அழிவுகரமானதாக நிரூபிக்கப்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சி (ல.ச.ச.க.) 1964ல் சிறிமா பண்டாரநாயக்கவின் முதலாளித்துவ அரசாங்கத்தில் நுழைந்துகொண்டதால், ட்ரொட்ஸ்கிசம் வரலாற்று ரீதியில் காட்டிக்கொடுக்கப்பட்டது. இது தொழிலாளர் மத்தியில் பெரும் அரசியல் குழப்பத்தை உருவாக்கிவிட்டதோடு இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட குட்டி முதலாளித்துவ அமைப்புகளுக்கு கதவுகளைத் திறந்துவிட்டது —மக்கள் விடுதலை முன்னிணயின் (ஜே.வி.பீ.) சிங்கள மக்கள்நலவாதமும் புலிகள் போன்ற தமிழ் பிரிவினைவாத குழுக்களும் தோன்றின.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும்.:சோசலிச சமத்துவக் கட்சியை, "ஜல.ச.ச.க. தலைவர்களானஸ கொல்வின் ஆர். டி சில்வா போன்ற 'ட்ரொட்ஸ்கிச' தலைவர்களுடன் அல்லது ஜே.வி.பீ.யின் 'ஸ்ராலினிச' தலைவர்களுடன் சேர்த்துக் காட்டுவதன், மூலம் ஈழ செயற்பாட்டாளர்கள் சோசலிச சமத்துவக் கட்சி மீது அவதூறு சுமத்துகின்றனர். ல.ச.ச.க.யின் காட்டிக்கொடுப்பை எதிர்த்த ஒரே கட்சியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (பு.க.க.), அவசியமான அரசியல் படிப்பினைகளை வெளிக்கொணர்ந்ததோடு ஜே.வி.பீ. மற்றும் புலிகள் உட்பட சகல வடிவிலான தேசியவாதம் மற்றும் இனவாதத்துக்கும் எதிராக தொழிலாளர்களை ஐக்கியப்படுத்த சளைக்காது அரசியல் போராட்டத்தை முன்னெடுத்தது. இந்தச் சாதனைகள் சகலருக்கும் கற்றுக்கொள்ளக் கூடியவாறு சோசலிச சமத்துவக் கட்சியின் வரலாற்று சர்வதேசிய அடித்தளங்கள் என்ற நூலில் உள்ளது.

இந்த ஈழ செயற்பாட்டாளர்கள், தமிழ் பிரிவினைவாத வேலைத் திட்டமானது சகல தமிழர்களதும் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகாக போலியாகக் கூறிக்கொள்கின்றனர். உண்மையில், தமிழ் தொழிலாளர்கள் மற்றும் வறியவர்களை சுரண்டுவதற்கான தனது "உரிமையை" உத்தரவாதம் செய்வதற்கு ஒரு

*தொடர்ச்சி 4ம் பக்கம்*

# பிரிவினைவாத வேலைத்திட்டம்:...

*3ம் பக்கத் தொடர்ச்சி*

தனியான அரசை ஸ்தாபிக்க முயற்சிக்கும் விலைபோகும் தமிழ் முதலாளித்துவத்தையே பிரதிநித்துவம் செய்கின்றது. இந்த அடித்தளத்திலேயே புலிகள் யுத்தத்தை முன்னெடுத்ததோடு தமிழ் வெகுஜனங்களை கொடூரமான முட்டுச் சந்துக்குள் தள்ளிவிட்டனர்.

2009ல் புலிகளின் தோல்வியானது அடிப்படையில் ஒரு இராணுவப் பிரச்சினை அல்ல, மாறாக அதன் வர்க்க நோக்கம் மற்றும் அரசியலின் விளைவே ஆகும். அனைத்து முதலாளித்துவ தேசியவாத அமைப்புகளைப் போலவே, புலிகளும் தொழிலாள வர்க்கத்துக்கு எந்தவொரு அறைகூவலும் விடுக்க இயல்பிலேயே இலாயக்கற்றவர்கள். வெகுஜனங்களின் எந்தவொரு சுயாதீன இயக்கத்தையுமிட்டு பீதியடைந்த புலிகள், தமது கட்டுப்பட்டில் இருந்த பிரதேசங்களில் ஜனநாயக–விரோத வழிமுறைகளை நாடினர். அவர்கள் இளைஞர்களை போராளிகளாக பலாத்காரமாக சேர்த்துக்கொண்டதோடு மக்கள் மீது வரிகளை சுமத்தியதுடன் தமது எதிரிகளையும் தம்மை விமர்சிப்பவர்களையும் வன்முறையில் நசுக்கினர்.

தமிழ் வெகுஜனங்கள் மத்தியிலான பரந்த அமைதியின்மையை திசை திருப்ப, புலிகள் இனவாத பகைமையை கிளறிவிட மேலும் மேலும் பிற்போக்கு வழிமுறைகளை நாடினர். அவர்கள் யுத்தத்துக்கும் கொழும்பு அரசாங்கத்தின் குற்றங்களுக்கும், சிங்கள தொழிலாளர்கள் கிராமப்புற வறியவர்கள் உட்பட ஒட்டு மொத்த "சிங்கள மக்கள்" மீதும் குற்றம் சாட்டினர்.

தொழிலாளர்கள் மற்றும் வறிய விவசாயிகளையும் வெடித்துச் சிதறச் செய்ய புலிகள் தற்கொலைக் குண்டுதாரிகளை அனுப்பியதோடு நூற்றுக்கணக்கான சிங்கள மக்களை கொன்றனர். "ஈழத் தமிழர்களின் தமிழ் தாயகத்தை காலனியாக்குவதில் பங்குபெற்றும் ஒழுக்கக் குற்றத்திற்காக" தமிழ்நெட் சிங்கள தொழிலாளர்களையும் விவசாயிகளையும் கண்டனம் செய்கின்றது. இது, வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் கொழும்பு அரசாங்கத்தால் குடியேற்றப்பட்ட வறிய விவசாயிகள் மீதான புலிகளின் வன்முறைத் தாக்குதலை நியாயப்படுத்துவதற்கே ஆகும். தமிழ் பேசும் முஸ்லிம்கள் கொழும்பு அரசாங்கத்தை ஆதரிப்பதாக பொய் குற்றம் சாட்டி அவர்களையும் புலிகள் வடமாகாணத்தில் இருந்து விரட்டினர். கொழும்பு அரசியல் ஸ்தாபனம் தனது கொடூரமான யுத்தத்தை நியாயப்படுத்த முயற்சிக்கையில் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் நேரடியாக அதன் கைகளில் பயன்பட்டன.

புலிகளின் பிரிவினைவாத வேலைத்திட்டத்தை எதிர்த்த "குற்றத்திற்காகவும்" கொழும்பு அரசாங்கத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் மற்றும் யுத்தத்துக்கும் எதிராக சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்த போராடியமைக்காகவும் 1998ல் நான்கு சோசலிச சமத்துவக் கட்சி உறுப்பினர்களை அவர்கள் கிளிநொச்சியில் கைது செய்ததில், தொழிலாள வர்க்கத்துக்கு புலிகளின் எதிர்ப்பு தெளிவாக வெளிப்பட்டது. தமிழ் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் சோசலிச சமத்துவக் கட்சியின் சோசலிச வேலைத் திட்டத்துக்கு அனுதாபம் கிடைத்துவிடும் என்று பீதியடைந்த புலிகள், பரந்த சர்வதேச பிரச்சாரத்தின் பின்னரே அதன் உறுப்பினர்களை விடுதலை செய்தனர். (பார்க்க: "சோ.ச.க.யும் ஸ்ரீலங்கா–ஈழம் சோசலிச குடியரசுக்கான போராட்டமும்.")

புலிகள் எப்போதும் தனியான தமிழ் ஈழத்துக்கான தமது எதிர்பார்ப்புகளை இந்தியா மற்றுன் பிரதான ஏகாதிபத்திய சக்திகளின் ஆதரவுடன் பிணைத்திருந்தனர். இதன் விளைவாக அவர்களின் "வெளியுறவு கொள்கை" மாறாமல் குறுகிய நோக்கம் கொண்ட நடைமுறைவாதத்தையே அடிப்படையாக் கொண்டிருந்து. குளிர் யுத்தத்தின் முடிவை அடித்து வந்த சர்வதேச உறவுகளிலான மாற்றங்களுக்கு அது தயாரின்றி முழுமையா சிக்கிக்கொண்டது. பின்னர் ஒரு பெருந்தவறாக உணரப்பட்ட, 1991ல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை, இந்தியாவிலும் மற்றும் சர்வதேச தளத்திலும் புலிகளின் நிலையை பலவீனப்படுத்தியது.

2001 செப்டெம்பர் 11ன் பின்னர், அமெரிக்காவின் "பயங்கரவாதத்தின் மீதான யுத்தத்தின்" இலக்காக ஆவதை தவிர்ப்பதற்காக புலிகள் சூழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டனர். 2002ல் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட புலிகள், சுதந்திர ஈழத்துக்கான தமது கோரிக்கையை கைவிட்டதோடு பெரும் ஏகாதிபத்திய சக்திகளால் ஏற்பாடுசெய்யப்பட்ட "சமாதான முன்னெடுப்புகளிலும்" விரைந்து இணைந்துகொண்டனர். எந்தவொரு தீர்விலும் புலிகளுக்கு ஒப்பீட்டளவில் ஒரு இரண்டாந்தர பாத்திரத்தை அனுமதிக்கவே அமெரிக்காவும் இந்தியாவும் விரும்புகின்றன என்பது நிரூபணமான உடன் விரைவில் பேச்சுவார்த்தைகள் முறிந்தன.

2006ல் ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ யுத்தத்தை மீண்டும் தொடக்கிய போது, புலிகளின் அரசியல் வங்குரோத்து வெளிப்டையாகத் தெரிந்தது. அவர்கள் இலங்கையிலும் துணைக்கண்டத்திலும் சர்வதேசங்களிலும் உள்ள தொழிலாள வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு அழைப்பும் விடுக்க முற்றிலும் இலாயக்கற்றவர்களாக இருந்தனர். தமது கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் தமிழ் வெகுஜனங்களை முழு அலட்சியத்துடன் நடத்திய புலிகள், ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்துக்கு அவர்களை தள்ளிச் சென்றனர். 2009ல் இலங்கை படைகள் தமது கடைசி தாக்குதல்களை முன்னெடுத்த போது, புலிகள் இராஜபக்ஷ அரசாங்கத்துக்கு இராஜதந்திர, நிதிய மற்றும் இராணுவ ஒத்துழைப்பை வழங்கிய அதே "சர்வதேச சமூகத்துக்கு" பயன்ற வேண்டுகோள்களை விடுக்கத் தள்ளப்பட்டனர்.

யுத்தத்தின் பின்னரும், எல்லா தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் எதாவதொரு வடிவிலான "சுயநிர்ணயத்துக்கு" ஆதரவு பெறுவதற்காக ஏகாதிபத்திய சக்திகளை எதிர்பார்த்தன. எதிரி சீனாவிடம் இருந்து இராஜபக்ஷ அரசாங்கத்தை தூரவிலகச் செய்வதற்காக நெருக்குவதற்கு "மனித உரிமைகள்" விவகாரத்தை அமெரிக்கா சுரண்டிக்கொண்டதை அவர்களும் பற்றிக்கொண்டனர். அவ்வாறு செய்ததன் மூலம், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய கட்சிகளும், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா மற்றும் சிரியாவிலும் கொடூரமான தசாப்தகால நவ–காலனித்துவ யுத்தங்களின் பின்னர் சீனாவுக்கு எதிரான மோதலுக்கு தயாராகின்ற நிலையில், அதனுடன் அணிசேர்கின்றன.

1930களின் பின்னர் ஏற்பட்டுள்ள பூகோள முதலாளித்துவத்தின் மோசமான பின்னடைவின் மத்தியில், இலங்கையிலும் உலகம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கம் பெரும் ஆபத்துக்களை எதிர்கொள்கின்ற நிலையிலும், இந்த வங்குரோத்து முன்னோக்குடன் தமிழ் தொழிலாளர்களையும் இளைஞர்களையும் கட்டிப்போட்டு வைக்கவே இந்த ஈழ செயற்பாட்டாளர்கள் விரும்புகின்றனர். எமது கட்டுரைகள் எச்சரித்தது போல், உலகம் பூராவும் உள்ள தனது சமதரப்பினரைப் போலவே, இராஜபக்ஷ அரசாங்கமும், முதலாளித்துவ நெருக்கடியின் சுமைகளை உழைக்கும் மக்கள் மீது திணிப்பதற்கு முயற்சிப்பதோடு எந்தவொரு எதிர்ப்பையும் நசுக்குவதற்கு யுத்த காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட பொலிஸ்–அரச இயந்திரத்தை பயன்படுத்தத் தயங்காது.

தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் வளர்ச்சியடைந்துவரும் விரோதத்தை எதிர்கொண்டுள்ள இராஜபக்ஷ அரசாங்கம், பிற்போக்கு இனவாத அரசியலை நாடுவதோடு முஸ்லிம்–விரோத மற்றும் தமிழர்–விரோத உணர்வுகளைக் கிளறிவிடும் பல்வேறு சிங்களப் பேரினவாத அமைப்புகளையும் ஆதரிக்கின்றது. இதற்குப் பதில், தமிழ் அல்லது முஸ்லிம் இனவாதத்துடன் பிரதிபலிப்பதல்ல. மாறாக, ஜனநாயக உரிமைகளை காக்கும் இயலுமை கொண்ட ஒரே சமூக சக்தியான தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்துக்காகப் போராடுவதே.

தனியான ஈழ அரசுக்கான கோரிக்கையை ஆதரிக்கத் தவறுகின்றமை, "இலங்கை அரசின் இன அழிப்பை" ஆதரிப்பதையே அர்த்தப்படுத்தும் என்ற ஈழ செயற்பாட்டாளர்களின் கூற்றை சோசலிச சமத்துவக் கட்சி நிராகரிக்கின்றது.

இலங்கை முதலாளித்துவத்தையோ அல்லது முதலாளித்துவ ஈழத்துக்கான கோரிக்கையையோ சோசலிச சமத்துவக் கட்சி ஆதரிக்கவில்லை. நாம், வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து உடனடியாக நிபந்தனையின்றி அனைத்து இலங்கை இராணுவங்களையும் வெளியேற்ற வேண்டுமென்றும், தனியான ஈழத்தை உருவாக்க ஆதரிக்க வேண்டாமென்றும் இடைவிடாமல் போராடி வந்துள்ளதோடு, ஸ்ரீலங்கா–ஈழம் சோசலிச குடியரசை ஸ்தாபிப்பதற்கான புரட்சிகர போராட்டத்தில் கிராமப்புற வறியவர்களின் தலைமையாக தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்தி அணிதிரட்ட போராடி வருகின்றோம்.

எமது முன்னோக்கு லியோன் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அதன் சரியான தன்மை கடந்த நூற்றாண்டு முழுதும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்களுமாக இலங்கை முதலாளித்துவத்தின் அனைத்து கன்னைகளும் ஜனநாயக உரிமைகள் மற்றும் ஒழுக்கமான வாழ்க்கைத் தரங்களுக்கான உழைக்கும் மக்களின் அபிலாஷைகளை இட்டு நிரப்ப முற்றிலும் இலாயக்கற்றவை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளன. தெற்காசியா மற்றும் உலகம் பூராவும் சோசலிசத்துக்கான போராட்டத்தின் பாகமாக, சோசலிசப் பாதையில் சமுதாயத்தை முழுமையாக மறு ஒழுங்கு செய்ய, தொழிலாளர்களதும் விவசாயிகளதும் அரசாங்கத்துக்காக போராடுவதன் மூலம் மட்டுமே இத்தகைய அபிலாஷைகளை அடைய முடியும்.

தொழிலாளர்களும் இளைஞர்களும் அவசியமான படிப்பினைகளைப் பெறவும், எமது வரலாறு மற்றும் வேலைத் திட்டத்தை கற்கவும் வேண்டும் என்றும், அடுத்து வரும் போராட்டங்களுக்கு அவசியமான புரட்சிகரத் தலைமைத்துவமாக சோசலிச சமத்துவக் கட்சியை கட்டியெழுப்ப அதில் இணைந்துகொள்ளுமாறும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

# சோசக வேட்பாளர்களை இராணுவம் மிரட்டுகிறது

**W. A. சுனில்**
***26 ஆகஸ்ட் 2013***

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "சுதந்திரமானதும் நியாயமானதும் தேர்தல்" என வெளிப்படையாக பிதற்றினாலும், எதிர்வரும் 21ம் திகதி வடமாகாண சபை தேர்தலில் போட்டியிடும் சோசலிச சமத்துவக் கட்சி (சோசக) உட்பட எதிர்கட்சிகளின் வேட்பாளர்களுக்கு எதிராக இராணுவம் அச்சுறுத்தும் பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

2009ம் ஆண்டு புலிகள் தோற்கடிக்கப்பட்டதை தொடர்ந்து, வடமாகாணம் இன்னும் கடுமையான இராணுவ ஆக்கிரமிப்பின் கீழேயே உள்ளது.

யாழ் குடாநாட்டின் மேற்கே புங்குடுதீவில் வசிக்கும், சோசகவின் வேட்பாளர் ஆ. முருகானந்தத்தின் வீட்டிற்கு சாதாரண உடையணிந்த இரு இராணுவ புலனாய்வு அதிகாரிகள் ஆகஸ்ட் 6ம் திகதி சென்றுள்ளனர். அவர்கள் தம்மை புலனாய்வு அதிகாரிகள் என அறிமுகப்படுத்திக் கொண்டு கட்சியை பற்றி வினாவியுள்ளனர். மெல்லிய பாணியிலான பயமுறுத்தலை விடுத்த அதிகாரிகள், தீவில் உள்ளவர்களுக்கு சோசக வேட்பாளர்கள் மீது நல்ல அபிப்பிராயம் இல்லை என குறிப்பிட்டனர். முருகானந்தம் சுருக்கமாக கட்சியை பற்றி கூறி, தன்னை விசாரிப்பதற்கு இராணுவத்திற்கு அதிகாரமில்லை எனக் குறிப்பிட்டார்.

வேட்பாளர் யாழ் உதவி தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்தபோது, அவர் பொலிஸிற்கு செல்லுமாறு கூறினார். புலனாய்வு அதிகாரிகளின் சட்டவிரோத நடவடிக்கை தொடர்பாக முருகானந்தம் உத்தியோகபூர்வமாக பொலிசில் முறைப்பாடு செய்தார். பொலிஸ் கடந்தவாரம் விசாரணை செய்யவிருந்த போதிலும், அதிகாரிகள் வரவில்லை.

ஆகஸட் 8, பல சீருடையணிந்த இராணுவத்தினர், யாழ்ப்பாணம் காட்டுக்கந்தோர் வீதியில் உள்ள சோசக வேட்பாளர் எஸ். பவானந்தனின் வீட்டிற்கு சென்றுள்ளனர். ஒருவரும் வீட்டில் இல்லாமையினால், அருகில் உளள்வர்களிடம் அவரை பற்றியும் ஏனைய வேட்பாளர்களான அவரது மனைவி ஆர். பாலகௌரி மற்றும் அவாரது சகோதரர் திருஞானவேல் தொடர்பாகவும் விசாரித்துள்ளனர். தாம் வேட்பாளர்களுக்கு "உதவ" வந்ததாக கூறிக்கொண்டனர்.

இந்த அச்சுறுத்தல் சோசகவின் அதன் வேட்பாளர்களின் ஜனநாயக உரிமைகளை மீறுகிறது. யாழ் மாவட்டத்தில் சோசக 19 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. சர்வதேச சோசலிச கொள்கையுடன் தேர்தலில் போட்டியிடும் ஒரே ஒரு அமைப்பு சோசக மட்டுமே ஆகும். மாறிமாறி கொழும்பில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை எதிர்ப்பதிலும் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதிலும் சோசகவுக்கும் அதன் முன்னோடி இயக்கமான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கும் நீண்ட வரலாறு உண்டு.

வடக்கு கிழக்கை ஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவத்திற்கு வகை தொகையின்றி ஜனநாயக உரிமைகளை மீறிய வரலாற்று பதிவுகள் உண்டு. 2007 மார்ச்சில் புங்குடுதீவில் இருந்து ஊர்காவற்துறைக்கு திரும்பிக்கொண்டிருந்த சோசக உறுப்பினர் நடராஜா விமலேஸ்வரனும் அவரது நண்பர் சிவநாதன் மதிவதனனும் காணாமல் போயினர். இந்த குற்றச் செயலில் கடற்படை மற்றும் அவர்களுடன் செயற்படும் துணைக்குழுக்களின் தொடர்பினை சோசக அம்பலத்திற்கு கொண்டுவந்த போதிலும் யாரும் கைது செய்யப்படவில்லை.

சோசக வேட்பாளர்கள் மீதான பயமுறுத்தல் இராணுவத்தின் பரந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாகும். பிரதான தமிழ் முதலாளித்துவக் கட்சியான தமிழ் கூட்டமைப்பு மற்றும் எதிர்க் கட்சியான ஜேவிபீ உட்பட ஏனைய கட்சிகளும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

இராணுவ புலனாய்வுத்துறையினர் மன்னாரில் தமிழ் கூட்டமைப்பு வேட்பாளர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களது சொந்த விபரங்களை சேகாரித்ததாக கூட்டமைப்பினர் தேர்தல் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர். வேட்பாளர்கள் எங்கு படித்தார்கள், கடந்த காலத்தில் என்ன வேலை செய்தார்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பது உட்பட குடும்ப விபரங்கள் போன்றவற்றை தருமாறு அந்த அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவஞானம், அண்மையில் நிதி சேகரிப்பதற்காக கனடா சென்றிருந்தமை தொடர்பில் விசாரிப்பதற்காக, ஆகஸ்ட் 15 யாழ்ப்பாண பொலிஸ் குற்ற விசாரணை பிரிவினர் அவரை விசாரணைக்கு அழைந்திருந்தனர்.

அன்றே 9 பேர் அடங்கிய ஈ.பீ.டி.பீ குண்டர்கள் குழு, தமிழ் கூட்டமைப்பு பிரச்சார குழுவின் வீடுகளுக்குள் புகுந்து, அவர்களை இரும்புக் கம்பிகளாலும் பொல்லுகளாலும் தாக்கியுள்ளன. ஈ.பீ.டி.பீ, ராஜபக்ஷ அரசாங்கத்தின் பங்காளியாகும். தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவாளர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜேவிபீ வேட்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டதாக அதன் பாரளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஜூலை 29 அன்று ஊடகங்களுக்கு கூறினார். இராணுவ புலனாய்வு அதிகாரிகள் வீடுகளுக்கு வந்து ஏன் அவர்கள் ஜேவிபீ பட்டியலில் போட்டியிடுகிறார்கள் என கேட்டுள்ளனர். தாம் கிளிநொச்சிக்கு செல்லுபோது ஜேவிபீயின் வாகனங்கள் திட்டமிடப்பட்ட முறையில் இராணுவ புலனாய்வு அதிகாரிகளால் ஓமந்தை காவலரணில் சோதனை செய்யப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

வட்டுகோட்டையில் அமைந்துள்ள ஜேவிபீ யாழ் மாவட்ட தலைமை வேட்பாளர் நடராஜாவின் காரியாலயத்திற்கு வந்த புலனாய்வு அதிகாரிகள், தேர்தல் துண்டுபிரசுரங்களை எடுத்துச் சென்றதாக அவர் எமது நிருபர்களிடம் கூறினார். ஜேவிபீ வேட்பாளர் சசிகலாவின் வீட்டிற்கு சென்ற புலனாய்வு அதிகாரிகள் ஏன் நீங்கள் ஜேவிபீ பட்டியலில் போட்டியிடுகின்றீர்கள் என விசாரித்துள்ளனர்.

தமிழ் சிறுபான்மை மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்குவதற்கும் 26 ஆண்டு காலமாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முன்னெடுத்த யுத்தத்துக்கும் ஆதரவளித்த ஜேவிபீ, ஒரு சிங்கள பேரினவாத கட்சியாகும். 1948ல் சுதந்திரத்திலிருந்தே, தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்தவும் தனது ஆட்சியை கொண்டுநடத்தவும், இனவாத அரசியலை நாடுகின்றமை கொழும்பு ஸ்தாபனத்தின் ஒரு அங்கமாகும்.

புலிகள் தோற்கடிக்கப்படும் வரை தமிழ் கூட்டமைப்பு அதன் பாராளுமன்ற ஊதுகுழலாக செயற்பட்டது. இன்று தமிழ் கூட்டமைப்பு, தமிழ் முதலாளித்துவ கும்பல்களின் சிறப்புரிமைகளை உத்தரவாதம் செய்யக் கூடிய ஒரு அதிகாரப் பரவலாக்கல் ஒழுங்குக்காக இராஜபக்ஷ அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு இந்தியாவினதும் பிரதான ஏகாதிபத்திய சக்திகளதும் ஆதரவை எதிர்பார்த்துள்ளது. இந்தியாவினதும் அமொரிக்காவினதும் அழுத்தத்தின் பேரிலேயே, இரண்டு தசாப்தங்களில் முதற் தடவையாக வட மாகாணசபை தேர்தலுக்கு தயக்கத்துடன் இராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

தமிழ் கூட்டமைப்புடனும் ஜே.வி.பீ.யுடனும் அடிப்படையில் அரசியல் எதிர்ப்பைக் கொண்டிருந்த போதிலும், அவர்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதை சோசக வன்மையாக கண்டிக்கின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் நடந்தது போலவே, இராணுவம் எதிர்க் கட்சியினரையும் அவர்களது வேட்பாளர்களையும் அச்சுறுத்தும் அதேவேளை, ஈ.பீ.டி.பீ. உட்பட அரசாங்க கட்சிகளுக்காக ஆதரவு பிரச்சாரம் செய்கிறது. தேர்தலுக்கு பின்னர் மாகாணசபையில் எத்தகைய அலங்கரிப்புகள் நடந்தாதலும், மகாணத்தினுள் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் இராணுவம் விளைபயனுள்ள வகையில் கட்டுப்பாட்டினை கொண்டிருக்கும்.

**சோசக மற்றும் ஐ.வை.எஸ்.எஸ்.ஈ.யில் சேர விரும்புகிறேன்**

பெயர்:..........................................

முகவரி:........................................

..........................................

தொழில்/பல்கலைக்கழகம்/கல்வியகம்/

பாடசாலை:....................................

தொ.பே:........................................

மின்னஞ்சல்:..................................

அனுப்பவேண்டிய முகவரி:
795 1/1, மெடியம்பலம சந்தி,
கோட்டை வீதி, கோட்டை.
தொ.பே: 011 2869239. wswscmb@sltnet.lk

சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில், 795 1/1, மெடியம்பலம சந்தி, கோட்டை வீதி, கோட்டையில் வதியும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால், யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் அமைந்துள்ள சத்யா பிரின்டர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.